**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 94 / 2023**

**வா.சா.1 – முகமது அலி ஜின்னா** **18.08.2026**

**குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கின் வாதி எனது தாயார். எனது தந்தையின் பெயர் சிபாயத்துல்லா. எனது தகப்பனார் 2023ல் இறந்துவிட்டார். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு எனது தந்தை இறந்துபோனார். எனது தகப்பனார் சிபாயத்துல்லா திருச்சியில் தொழில் செய்து வந்தார். எங்களின் நிரந்தர குடியிருப்பு திருச்சி தான். வாதி தற்போது திருச்சியில் தான் வசித்து வருகிறார். தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்திற்கு வடக்கே மூசலிமான் காலிமனை உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கே பள்ளிக்கூட தெரு உள்ளது. கிழக்கே பவுசானா காலிமனையும் 2வது லக்க காலிமனையும் உள்ளது. தெற்கே யூசுப் காலிமனை கிழமேல் பாதை உள்ளது. தாவா சொத்து ஆதியில் முகமது என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி முகமதுவின் அப்பா பெயர் குஞ்சாலி நாகூர்கனி ராவுத்தர். மேற்படி முகமதுவின் உடன் பிறந்தவர்கள் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி முகமதுவிற்கு 5 பிள்ளைகள். அதில் 4 பெண் மக்கள் 1 ஆண் அடங்குவார்கள். வாதி தாவா சொத்தை எனது அப்பா சிபாயத்துல்லாவிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரையம் பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியும். வாதி ரூ.1,00,000/- கொடுத்து தாவா சொத்தை எனது தந்தை சிபாயத்துல்லாவிடமிருந்து கிரையம் வாங்கினார். தாவா சொத்தை எனது அப்பா கச்சிமைதீன் என்பவரிடமிருந்து பொதுஅதிகார ஆவணம் மூலம் பெற்றிருந்தார். மேற்படி கச்சிமைதீன் முகமது என்பவரின் மகன் ஆவார். மேற்படி கச்சிமைதீன் உடன்பிறந்தவர்கள் 4 பெண்கள்

ஆவார்கள். எனது தகப்பனாருக்கு கச்சிமைதீன் பொதுஅதிகாரம் கொடுத்த காலத்தில் கச்சிமைதீன் பர்மாவில் இருந்துவந்தார். கச்சிமைதீன் எந்தெந்த சொத்தை பொறுத்து பொதுஅதிகாரம் கொடுத்தார் என்று எனக்கு தெரியும். கச்சிமைதீன் எனது தகப்பனாருக்கு கொடுத்த பொதுஅதிகார ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இளையான்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்த அசல் வழக்கு எண் 39/2010 வழக்கை பற்றி எனக்கு தெரியும். அந்த வழக்கில் எனது தகப்பனார் சிபாயத்துல்லாவும் ஒரு தரப்பினராக இருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் கச்சிமைதீன் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் பொது அதிகார ஆவணத்தை மேற்படி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண் 39/2010 வழக்கை இந்த வழக்கின் பிரதிவாதியான சர்மிளா பேகம் தாக்கல் செய்திருந்தார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை